செ.வெ.எண்: 191 நாள்: 28/02/2011

## பத்திரிக்கை செய்திக்குறிப்பு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 15.08.2010 அன்று நடைபெற்ற சுதந்திர தின நிகழ்ச்சியில், மின்சார சிக்கனத்தை மேற்கொள்ளும் பொருட்டு பழைய பம்புசெட்டுகளுக்கு பதிலாக திறன் மிக்க புதிய பம்புசெட்டுகள் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு இலவசமாகவும், பெரிய விவசாயிகளுக்கு 50 சதவீதம் மானியத்துடனும் பொருத்தித் தரப்படும் என்று அறிவித்தார்கள்.

இத்திட்டம் தொடர்பாக தமிழக அரசால் 04.02.2011 அன்று இதற்கான அரசாணை (நிலை) எண்.07, நாள் 04.02.2011 வெளியிடப்பட்டது.

தமிழ் நாட்டில் தற்பொழுது, சுமார் 19.08 லட்சம் விவசாய மின் இணைப்புகள் உள்ளன. தமிழக அரசு திட்டதின் கீழ், விவசாய பொறியியல் துறையின் மூலம் மார்ச் 2010 வரை உயர் சக்தித் திறன் கொண்ட பம்புசெட்டுகள் 50 சதவீதம் மானியத்துடன் மாற்றப்பட்டுள்ளது. தமிழ் நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகமானது 2000 - 01 ஆம் ஆண்டு முதல் கடந்த 10 ஆண்டுகளில் சுமார் 3,44,199 விவசாய இணைப்புக்ளைக் கொடுத்துள்ளது. புதிய பம்புசெட்டுகள் பத்து ஆண்டுகளுக்கு உழைக்கும் என எதிர்பார்க்கப்படுவதால், கடந்த 10 ஆண்டுகளில் விவசாய மின் இணைப்புகள் கொடுக்கப்பட்ட பம்புசெட்டுகளும் ஏற்கனவே வேளாண்மைப் பொறியியல் துறையால் மாற்றப்பட்ட பம்புசெட்டுகளும் இந்த திட்டத்திலிருந்து நீக்கப்படுகிறது. எனவே ஒட்டு மொத்தமாக சுமார் 14.67 லட்சம் விவசாய மின் இணைப்புகளுக்கு புதிய உயர் சக்தித் திறன் கொண்ட பம்புசெட்டுகள் மாற்றப்பட வேண்டி உள்ளது.

விவசாய நுகர்வோர்களால் சுமார் 10778 மில்லியன் யூனிட்டுகள் மின்சாரம் 2009 - 10 ஆம் ஆண்டில் பயன்படுத்தப்பட்டுள்ளது. தற்போது பயன்பாட்டில் உள்ள திறன் குறைந்த பம்புசெட்டுகளுக்குப் பதிலாக புதிய உயர் சக்தித் திறன் கொண்ட பம்புசெட்டுகளை மாற்றுவதால் குறைந்த பட்சம் 20 சதவீத மின்சக்தியைச் சேமிக்க வாய்ப்புள்ளது.

உயர் சக்தித் திறன் கொண்ட பம்புசெட்டுகளை மாற்றி மற்றும் நிறுவுவதற்கும் சராசரியாக ஒரு பம்புசெட்டுக்கு ரூபாய் 22,000/- ஆகும். முதல் கட்டமாக இத்திட்டதில் மாநிலம் முழுவதும் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட 32 மின் தொடர்களில் உள்ள சுமார் 10,000 பம்புசெட்டுகள் மாற்றப்பட உள்ளது. இதற்கான மொத்த முதலீட்டுத் தொகை சுமார் ரூபாய் 22 கோடியாகும்.

இத்திட்டத்தினை செயல்படுத்துவதின் துவக்கமாக, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் **ஆற்காடு திரு.நா.வீராசாமி** அவர்களால் 10 விவசாயிகளுக்கு புதிய திறன் மிக்க பம்புசெட்டுகள், தமிழக அரசு, தமிழ் நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மற்றும் தமிழ் நாடு மின் தொடரமைப்புக் கழகத்தினைச் சார்ந்த உயர் அதிகாரிகள் முன்னிலையில் வழங்கப்பட்டது.

2/2

வெளியீடு, இயக்குநர்,
**செய்தி, மக்கள் தொடர்புத் துறை**
**சென்னை-9**